விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

வரி 19 ஐப்பசி 12 ஜுல்ஹ: 14 இதழ் 258
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-10-77

### எரிக்கப்பட்ட பழைய மார்க்கட்டை

# அரசு தன்செலவில் கட்டும்

## பிரதி அமைச்சர் தலைமையில் நடந்த மகாநாட்டில் முடிவு

### கூட்டணித் தலைவர்களும் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் சில வாரத்தின்போது எரிந்து தரைமட்டமான பழையமார்க்கட்டை புதிதாகக் கட்டும் செலவை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று நேற்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலக மண்டபத்தில் பிரதி அமைச்சர் திரு பீ. சி இம்புலான கலந்துகொண்ட மகாநாட்டில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி வேலைகள், வீடமைப்புத்திட்டங்கள், குடிநீர் திட்டங்கள் பற்றி சுமார் 5 மணி நேரமாக ஆராயப்பட்டது

### திறந்த வெளி மார்க்கட்

யாழ்ப்பாணம் ரீகல் தியேட்டர் அருகில் உள்ள காணியில் திறந்த வெளி மார்க்கட் ஒன்று அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டபோது அக்காணியை சுவீகரிக்கவேண்டும் என யாழ்.விசேட ஆணையாளர் திரு. கே.சிவஞானம் தெரிவித்தார். இதுதொடர்பாக நியமிக்கப்பட்ட கமிட்டியில் யாழ்ப்பாணம் எம். பி. திரு.

(6ம் பக்கம் பார்க்க)

### மகாவலி திட்டத்தை விரைவுபடுத்தி

# ஐந்து ஆண்டுகளில் அரிசியில் தன்னிறைவு!

# ஏர்பூட்டு விழாவில் பிரதமர் நாட்டுமக்களுக்கு வாக்குறுதி

கொழும்பு, வியாழன்

"முப்பது வருடங்களுக்கு என்று வகுக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆறுவருடங்களாகக் குறைப்பதுடன், ஐந்துவருட காலத்துக்குள் அரிசித் தேவையில் தன்னிறைவு பெறுவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்."

இவ்வாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன கூறினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டுவெஸ் நுவரயில் 'வப் மகுல்' எனப்படும் விவசாயப் பெருவிழாவை ஆரம்பித்து வைத்து நாட்டுமக்களுக்கு நிகழ்த்திய உரையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கும் கலாசாரத்துக்கும் அமைய இன்று காலை 11மணி 27 நிமிடமளவில் இருந்த சுபவேளையில் இவ்வைபவம் ஆரம்பமாகியது.

### தேசிய முயற்சி

ஏர்பிடித்து அரசாங்கத்தின் உணவு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் மேலும் கூறியதாவது:

"இன்று ஆரம்பிக்கப்படும் இந்த உணவுற்பத்தி இயக்கம், ஒரு தேசிய முயற்சியாகக் கருதப்படவேண்டியதாகும். உணவுஉற்பத்தி இயக்கத்தைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி பிரதமர், அமைச்சர்கள், எம். பி க்கள் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்"

இறக்குமதிக்காக நாம் செலவிடும் வெளிநாட்டு நாணய மாற்றை மீதப்படுத்தி, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்.

"1948ல் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிபீடத்தில் அமர்ந்த அரசாங்கங்கள், விவசாயத்துறையை ஊக்குவித்தே வந்துள்ளன. அவற்றின் பலனாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு என்பன உள்நாட்டிலேயே உற்பத்திசெய்யப்பட்டன. இதன் மூலம் வெளிநாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த பணத்தை நம்நாட்டு விவசாயிகளேபெறக் கூடியதாக இருந்தது.

### அரிசியில் தன்னிறைவு

"அரிசித் தேவையில் 5 வருடங்களில் தன்னிறைவுபெற வேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகும். 30 வருடங்களுக்கு என்று வகுக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை 6 வருடங்களுக்குள் பூர்த்திசெய்யவும் அரசு நடவடிக்கை எடுக்கும் இதற்கு மனித வளங்கள் பயன்படுத்தப்படும். ஆயிரக்கணக்கானோர்க்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

"1953ம் ஆண்டில் நான் விவசாய அமைச்சராக இருந்தபோது கலந்துகொண்டதன்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'பாகுபாடு இன்றி அரசு சேவையாற்றும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஐக்கியதேசியக்கட்சிகடந்த காலத்தில் இந்நாட்டு மக்களுக்கு எத்தனையோ விதத்தில் உதவிகளை செய்துள்ளது. அதேபோன்று இனிமேலும் இந்நாட்டு மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு சாதி, சமய, இன வேறுபாடின்றி சேவையாற்றும் என்று உறுதியளிக்கிறேன்."

யாழ்ப்பாணம் கச்சேரி மண்டபத்தில் நடந்த மகாநாட்டில் வீடமைப்பு உள்ளூராட்சி பிரதி அமைச்சர் திரு. பீ சி இம்புலான நேற்று பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எஸ். விஜயபாலா தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பிக்களான திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன், கே. துரைரத்தினம், எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி. தர்மலிங்கம், ரி இராஜலிங்கம் வி. ஆனந்தசங்கரி, மற்றும் உள்ளூராட்சிமன்ற விசேட ஆணையாளர்களும் கலந்துகொண்டனர்.

பிரதி அமைச்சர் திரு. பீ சி இம்புலான மேலும் கூறியதாவது:

இந்நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக்கட்சி பாடுபட்டு வருகிறது. ஐக்கியதேசியக்கட்சிக்கு நீண்டகால சரித்திரம் உண்டு இந்நாட்டின் சுதந்திரத்திற்குப் போராடி, சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தது. இந்நாட்டில் முதல் அரசாங்கத்தை அமைத்தது. சகல இன மக்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நடத்தி வந்தது. அமரர் ஜி ஜி.பொன்னம்பலம் திரு. கே சிற்றம்பலம், திரு. எஸ் சுந்தரலிங்கம் போன்றவர்கள் மந்திரிசபையில் இடம்பெற்று நாட்டின் அபிவிருத்திக்காக உழைத்தனர்.

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கமே நாட்டில் முதல் முதலாக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தது கைத்தொழில் அமைச்சராக அம

(6-ம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கைத் தமிழர்கள் வடக்கில்குடியேற ஆவலாம்

## நாளாந்தம் கடிதங்கள் வருவதாக 'அமிர்' கூறுகிறார்

மாவிட்டபுரம், வியாழன்

"அகதிகளாக எம்மை நாடி வந்தவர்களுக்கு நாம் வாழ்வளிக்கவெனப் பல திட்டங்களைச் செயல்படுத்த முனையும்போது பல்வேறு சிக்கல்களையும் முட்டுக்கட்டைகளையும் எதிர் நோக்கவேண்டியுள்ளது. ஒரு அரசாங்கம் செய்யவேண்டிய வேலையை அரசாங்க உதவியின்றி, அரசின் பல்வேறு முட்டுக்கட்டைகளுக்கிடையில் நடத்துவதென்பது மிகவும் சிரமமானதாகும், இதை நமது மக்கள் நன்கு உணர வேண்டும். ஆனால் எந்தக் கஷ்டங்கள் எம்மை எதிர் நோக்கினாலும் எமது சகோதரர்களை நாம் வாழ்வித்தே தீரவேண்டிய நிலையில் உள்ளோம். வேறு எவரையும் நம்பிப் பிரயோசனமில்லை."

இவ்வாறு காங்கேசன்துறைத் தொகுதியில் அகதிகள் கொடித்தினம் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியைத் தமிழர் புனர் வாழ்வுச் சபையின் பொருளாளர் திரு. லங்கா நேசையாவிடம் கையளித்துப் பேசிய காங்கேசன் துறைப் பிரதிநிதியும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பி. கனகசபாபதி தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

### தெற்கே தொடர்ந்தும் வாழ முடியாத நிலையாம்

"யாழ். மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களிலுள்ள சுமார் 1000 குடும்பங்களுக்கு மட்டும் நாம் வாழ்வளித்து விட்டால் போதாது. மேலும்

(6 ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊற்றுநிறுவனமும். யாழ் வளாக தென்னாசியக் கல்விக் கழகமும் சேர்ந்து இம்மாதம் 29-ம், 30 ம் திகதிகளில் யாழ் வளாகத்தில் நடாத்தவிருந்த 'இலங்கையில் பிராந்திய அபிவிருத்தி' என்ற தலைப்பிலான கருத்தரங்கு எதிர்பாராத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அமைப்புக்குழு செயலாளர் டாக்டர் ஆர். நரேந்திரன் தெரிவித்தார். (கா)

## இந்திராவுக்கு கறுப்புக்கொடி தி.மு.க. முடிவு

சென்னை, அக். 27

முன்னாள் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அடுத்த மாதம் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக்கொடி காட்டுவர்.

திரு. மு. கருணாநிதி தலைமையில் இன்று நடைபெற்ற தி. மு க செயற்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. ஜனநாயகத்தை நசுக்கி சர்வாதிகாரம் நடத்திய திருமதி காந்திக்கு ஜனநாயக முறையில் அமைதியாக கறுப்புக்கொடி காட்டப்படும் என்று திரு. கருணாநிதி இன்று கூறினார்.

## வரி விளம்பரம்

### தேவை

லேத்மன்-கடைச்சல் வேலை அனுபவமுள்ள ஒழுக்கமான ஆள் தேவை. விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 336, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 7506

நல்ல நிலைமையிலுள்ள 7சிறி தொடர் பிலக்கமுடைய கேம்பிறிஜ் ஏ 60 காரொன்று விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். 276, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7509

### விற்பனைக்கு

சந்தனமாத ஒழுங்கை சுண்டிக்குளியில் 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் திருமதி தர்மலிங்கம் 'அம்பிகை வாசா' சந்தனமாத ஒழுங்கை, சுண்டிக்குளி. 7515

### வாடகைக்கு

முட்டாஸ்கடைச் சந்திக்கருகாமையில் மானிப்பாய் வீதியில் உள்ள கடை வாடகைக்குண்டு. மொத்த, சில்லறை வியாபாரத்திற்கு ஏற்றஇடம். விபரங்களுக்கு: 71 (23) மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 7521

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினை ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி சமாதியில் அருள்மிகு ஸ்ரீசோமாஸ்கந்தமூர்த்தி புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்இம்மாதம் 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. அடுத்த மாதம் 2-ம் திகதி புதனன்று மகாகும்பாபிஷேகம் நிகழும். (அ)

## நெற்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த இரு வாரங்களாக பெய்துவரும் பெருமழையால் பல பகுதிகளிலும் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி பகுதியில் பெருமழையால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக நமதுநெல்லியடி நிருபர் அறிவிக்கிறார். (இ)

## அகதிகளுக்கு உணவுப்பொருள் வழங்கினர்

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி செந்தமிழ் நாடக மன்றத்தினர் நாடக விழா மூலம் சேகரித்த சுமார் 500 ரூபாவுக்கும் அச்சுவேலி அகதிகள் முகாமில் உள்ள அகதிகளுக்கு உணவுப் பொருட்கள், மருந்துவகை, முதலியவற்றை வழங்கினர். (அ)

## தெல்லிப்பளையில் ஐ. நா. தினம்

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஐ. நா. சபை ஸ்தாபக தினவிழா இம்மாதம் 30ம் திகதி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கொண்டாடப்படவிருக்கிறது.

கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல பிரமுகர்களது சொற்பொழிவுகள் இடம்பெற உள்ளன. (உ)

...

## பஸ் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகரிலிருந்து நாவாலி சங்கரத்தை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் 786ம் இலக்க பஸ்கள் அடுத்தமாதம் 1ம் திகதி முதல் கச்சேரிவரை சேவையில் ஈடுபடும்.

கல்வி இலாகா, நீர்ப்பாசன இலாகா, கச்சேரி ஆகியவற்றுக்குச் செல்லும் ஊழியர்கள், பொதுமக்களின் வசதிகருதி இப்பஸ்கள் நல்லூர் மூத்திரைச்சந்தி ஊடாக கச்சேரி வரை செல்லும். அத்துடன் இப்பாதையில் சேவையாற்றும் பஸ்களின் தொகையும் அதிகரிக்கப்படவுள்ளன.

நவாலி சங்கரத்தை பிரயாணிகள் சங்கத்தின் கோரிக்கையின்பேரில் வட்டுக்கோட்டை தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. என். இரத்தினசிங்கம், காரைநகர் பஸ் டிப்போ அதிகாரி திரு ரி. தியாகராசாவுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையை அடுத்தே இச்சேவை அபிவிருத்தி செய்யப்படுகிறது. (இ)

...

## சித்தி பெற்றார்

மாவிட்டபுரம், வியா

விமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திரு. க. திருநாவுக்கரசு யாழ். வளாக பட்டத்தின் பின் படிப்பு இந்து நாகரிக டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க முன்னாள் காரியதரிசியான இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மயிலணி சைவவித்தியாலயம் திருஞானசம்பந்த வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். (உ)

## நிர்வாகிகள்

வேலணை, வியா.

வேலணை கிழக்குமாதர் அபிவிருத்தி முன்னேற்றச் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்:திருமதி இ.கார்த்திகேசு, செயலாளர் செல்வி பி. அன்னமலர், தனதிகாரி இ. புவனேஸ்வரி மற்றும் ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. [உ]

## விபத்து மரணம்

நெல்லியடி, வியாழன்

புலோலி ஆண்கள் உயர்தர வகுப்பு மாணவன் சூரசங்காரம் பொற்சிலை அரசு (வயது 17) என்பவரின் மரணம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நவராத்திரிவிழா நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் வகையில் மின் இணைப்புவேலையில் ஈடுபட்டபோதே மின்சாரம் தாக்கி மரணம்சம்பவித்ததாக புலோலி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. வி. புவனேந்திரன் நடத்திய மரணவிசாரணையின் போது கூறப்பட்டது. (உ)

# 1,600,000 புசல் நெல் கொள்வனவு

## திருமலை நெற்சந்தைப்படுத்தும் சபை சாதனை

திருக்கோணமலை, வியா

இவ்வருடத்தில் கடந்த செப்டம்பர் மாதம் வரை திருக்கோணமலைப் பிராந்திய நெற் சந்தைப்படுத்தும் சபை சுமார் 1,600,000 புசல் நெல்லைக் கொள்வனவு செய்திருக்கிறது. இது சென்ற ஆண்டுக் கொள்வனவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இருமடங்கு கூடுதலாகும்.

இவ்வாண்டில் மேலும்நெல் கொள்வனவு செய்யப்படவிருப்பதுடன் மேலதிக நெற் களஞ்சியங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது. திருமலை நகரிலும் மற்றும் கந்தளாய் போன்ற இடங்களிலும் ஏழு மேலதிக நெற்களஞ்சியங்கள் அமைக்கப்படுமாம். (அ)

திருமலைப்பகுதியில்

## நெல்வேளாண்மை வெள்ளத்தில் நாசம்

திருக்கோணமலை,வியாழன்

தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாகத்திருகோணமலையிலும் அதன் சுற்றுப்புறங்களாகிய சீனன்குடா, கந்தளாய், தம்பலகாமம், பன்குளம், மொறவெவ போன்ற இடங்களில் உள்ள வயல்களில் அறுவடைக்கு ஆயத்தமாக இருந்த நெற்கதிர்கள் யாவும் மழை நீரில் மூழ்கிவிட்டன. இதன் காரணமாக விவசாயிகளுக்குப்பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதுபற்றி அவ்வப்பகுதி விவசாயிகள் சேருவில தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எச் டி. எல். லீலரத்ன, மூதூர் பேரவை உறுப்பினர் திரு. எம் ஈ. எச் மஹ்றூப் ஆகியோருக்கு முறையிட்டுள்ளனர்

இதே சமயம் அறுவடையை முடித்துக்கொண்டவர்கள் வருகின்ற பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அளவுக்கு மிஞ்சி வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதே இதற்குக்காரணமாகும். (அ)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

நெல்லியடி, வியா

துப்பாக்கி சூட்டுக்காயங்களுக்குள்ளான இருவரில் ஒருவர் ஸ்தலத்திலே பலியானார். மற்றவர் படுகாயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் புலோலிப் பகுதியைச் சேர்ந்த வல்லிபுரக் குறிச்சி என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

கந்தன் கணபதி அல்லது கணேசு என்பவரே காயங்களுக்குள்ளாகி ஸ்தலத்திலேயே பலியானவராவார்

கணபதி நாகமுத்து என்பவரே காலில் ஏற்பட்ட காயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு சேனநாயக்கா தீவிரவிசாரணை செய்து வருகிறார். இதுவரை சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை. (உ)

......

## சென். பற்றிக்ஸ் சாரணர் இயக்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம் வெள்ளி

சென். பற்றிக்ஸ் கல்லூரி சாரண இயக்கத்தின் 10-வது ஆண்டு நிறைவையொட்டி நாளை சனிக்கிழமை கல்லூரியில் சிறப்பு விழாவொன்று நிகழவுள்ளது.

காலையில் சாரண அணிகளின் பாசறையும் மாலையில் பாசறைத் தீ நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்ச்சியாக கல்லூரிச் சாரணர்குழு ஆசிரியர் திரு டபிள்யூ. ஜே. நவரத்தினம் 'தருசின்னம்' அளித்துக் கௌரவிக்கப்படுவார். பிரதம அதிதியாக யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் கலந்து கொள்வார். இவ் விழாவையொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. இதற்கான பொறுப்புகளை ஆசிரியர் சி. ஆர். யோசப் ஏற்றுள்ளார். (கி அ)

......

## பயமுறுத்தினராம்

பண்டத்தரிப்பு, வியா

கணவர் இல்லாத நேரத்தில் வீட்டிற் நுழைந்த மூவர் தம்மை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் கத்தியைக் காட்டி கொலைசெய்து விடுவோம் என்று பயமுறுத்தியதாக அளவெட்டியைச் சேர்ந்த அருளம்பலம் இரத்தினேஸ்வரி என்னும் இளம் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இப்புகார் குறித்து சுன்னாகம் பொலிசார் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

## கார் கொள்ளைகள் விரலடையாளங்கள் பதிவு

மாவிட்டபுரம்,வியாழன்

அச்சுவேலியில் 7 இளைஞர்களால் கடத்தப்பட்டு அநாதரவாக விட்டுச்செல்லப்பட்ட இருகார்களிலும் கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டன. துப்புத்துலக்க பொலிஸ் நாய்கள் வரவழைக்கப்பட்டிருந்தன.

கடந்த சனிக்கிழமை அதிகாலை துப்பாக்கிகள் சகிதம் வக்சோல் காரொன்றையும் ஏ 40 காரொன்றையும் 7 இளைஞர்கள் அச்சுவேலியிலிருந்துகடத்திச் சென்று ஒரு மைல் தூரத்திற்குள் அநாதரவாக விட்டுச் சென்றது தெரிந்ததே.

இக்கார்கள் காங்கேசன்துறைப் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டு விசாரணை செய்யப்பட்டதுடன் கைவிரல் அடையாள நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு கையடையாளங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் நாயும் துப்புத்துலக்குவதற்காக வருவிக்கப்பட்டது. ஆனால் அதனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

இதே வேளை துப்பாக்கி முனையில் கார்கடத்தல் கொள்ளையிடல் ஆகிய சம்பவங்களையடுத்து காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (உ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. 1664

நவரத்தினம் கைம்பெண் யோகபிள்ளை சுழிபுரம் வடக்கு சுளிபுரம் வழக்காளி

எதிராக

பாலசுப்பிரமணியம் கைம்பெண் கமலாசனதேவி செட்டிகுறிச்சி சுளிபுரம் வடக்கு, சுளிபுரம் தனது சொந்த சார்பிலும் இறந்த கார்த்திகேசு பாலசுப்பிரமணியத்தின் சட்டபூர்வ பிரதிநிதி என்ற முறையிலும், எதிரிகள்

மல்லாகம் டிஸ்றிக்கோட்டில் இல. M. B. 1664 வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 5980/-ம் 11-2-77 தொடக்கம் 9-5-77 வரைக்கும் ரூபாய் 4500/-க்கு 15வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 813/ 80 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை 'திசைமழை' நெற்பரப்பு பத்தும் குழி ஏழும் தென்னெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு றேட்டு வடக்கு கண்ணை அம்மன் கோவிற்காணி மேற்கு நன்னித்தம்பி பொன்னையாவின் உரிமைக்காரருக்கு உரிய காணி தெற்கு மூத்ததம்பி செல்லத்துரைக்கும் பங்காளருக்கும் உரிய காணி இதடங்கலிற் சொரியலாய் முறையே நாலில் ஒரு பங்கும் எட்டிலொரு பங்கும், எட்டிலொருபங்கும் ஆக மொத்தம் அரைவாசியும் அதற்குரியவைகளும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்.

தொல்புரம்,
19-9-77. 7518

## பதவி வெற்றிடங்கள்

### தெல்லிப்பளை கூட்டுறவு மருத்துவ மனைச்சங்கம்

பின்வரும் பதவிகளுக்குத் தகுதி வாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மருத்துவ அதிகாரி
தகைமைகள்: எம். பி. பி. எஸ். ஐந்துவருட அனுபவம்.

2. மருத்துவ அதிகாரி
தகைமைகள்: எம். பி. பி. எஸ். பட்டத்துடன் சத்திர சிகிச்சை அல்லது மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

3. பதிவு செய்யப்பட்ட மருத்துவ அப்போதிக்கரி
சம்பளம்: நேரில் பேசி ஒப்பந்தம்செய்து கொள்ளலாம்.

முடிவு திகதி: 4-11-77
விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

சு. கந்தையா
தலைவர்
தெல்லிப்பளை கூட்டுறவு மருத்துவமனை
(ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை)
யாழ்ப்பாணம்

7523

★ மேற்காசிய பிரச்னைக்குத் தீர்வு ★ இனத்துவேஷத்துக்கு கண்டனம்

★ இந்துசமுத்திர சமாதான பிரகடனம்

# அணு சோதனைகள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்

## மொரார்ஜி - பிரஷ்னேவ் கூட்டறிக்கை

மாஸ்கோ, அக். 27

அணு ஆயுத பரிசோதனைகளை சகல நாடுகளிலும் முற்றாகத் தடை செய்யவேண்டுமென்று இந்தியாவும் மாஸ்கோவும் கூட்டாக வலியுறுத்தி உள்ளன.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் 6 நாள் உத்தியோக பூர்வ ரஷ்ய விஜயத்தின் இறுதியில் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

தமது விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய திரு. மொரார்ஜி தேசாயை ரஷ்ய ஜனாதிபதியும், கம்யூனிஸ்ட் கட்சித்தலைவருமான திரு. பிரஷ்னேவ், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் ஆகியோர் மாஸ்கோ விமான நிலையத்தில் வழி அனுப்பிவைத்தனர்.

### மக்கள் வழியனுப்பினர்

கடந்த இரவு நெடுநேரமாகியும் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது ரஷ்ய மக்கள் கிரெம்ளின் மாளிகையிலிருந்து விமான நிலையம் வரை செல்லும் வீதியின் இருமருங்கிலும் பெருந்திரளாகக்கூடி நின்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் திரு. தேசாயை வழிஅனுப்பி வைத்தனர்.

இந்நாட்டுத்தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரஷ்ய-இந்திய மக்களினது நன்மை கருதி இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் பலப்படுத்தவேண்டும்.

### மத்திய கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு

மத்திய கிழக்குப் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வுகிடைக்க கூடிய வகையில், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் கலந்துகொள்ளும் ஜெனிவா சமாதான மகாநாட்டை உடன் கூட்டவேண்டும்.

### இந்து சமுத்திர சமாதானப்பிரகடனம்

இந்துசமுத்திர நாடுகளில் வாழும் மக்களின் விருப்பப்படி அப்பகுதி சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கு இருநாடுகளும் பாடுபடவேண்டும்.

### இனத்துவேஷத்துக்கு கண்டனம்

தென்ஆபிரிக்காவிலும் உலகின் வேறுபகுதிகளிலும் நடைபெறும் இனத்துவேஷநடவடிக்கைகளை இருநாடுகளும் கண்டிக்க வேண்டும். (இ)

## மொரார்ஜிக்கு டாக்டர் பட்டம்

மாஸ்கோ, அக். 27

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்க்கு மாஸ்கோ பல்கலைக் கழகம் தத்துவத் துறையில் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. (இ)

## இராணுவக் கடனுக்கு 10 வருடத் தடை!

கெய்ரோ, அக். 27

சோவியத் யூனியனின் இராணுவக் கடன்களை 10 ஆண்டுகளுக்குத் திருப்பிவழங்கவேண்டாம் என்று எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே எகிப்துக்குக் கடனாக வழங்கிய இராணுவ ஆயுதங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை இப்போது சோவியத் யூனியன் வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளதால் எகிப்து இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (இ)

## யு. எஸ். - ரஷ்ய இரகசிய மகாநாடு

ஜெனிவா, அக். 27

பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதுகுறித்து அமெரிக்காவும் ரஷ்யாவும் இரகசிய மகாநாடொன்றை நடத்தியுள்ளன.

ஜெனிவாவில் இம்மகாநாடு 6 நாட்கள் நடைபெற்றது.

கதிரியக்கத்தால் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கட்டுப்பாடுத்துவது பற்றியே இம்மகாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

இம்மகாநாட்டின் முடிவுகள் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. (இ)

## பதவி விலக மறுப்பு

புதுடில்லி, அக். 27

இந்தியக் காங்கிரஸின் தலைமைப் பதவியிலிருந்து தாம் எக்காரணம்கொண்டும் விலகப்போவதில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு. பிரம்மானந்தரெட்டி கூறியுள்ளார்.

புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ)

## தாயகம் திரும்புவோருக்கு விசேஷரயில் வசதிகள்

### அமைச்சர் மொகமட் ஏற்பாடு

கொழும்பு, வியா

பதுளையிலிருந்து மன்னாருக்கு ரயில்மூலம் பிரயாணம் செய்யும் தாயகம் திரும்புவோருக்கு விசேஷ ரயில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமட் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மலையகப் பகுதிகளிலிருந்து கப்பல்மூலமாக தாயகம் திரும்புவோர் மன்னார் செல்வதில் மிகவும் சிரமப்படுகின்றார்கள் என்றும் இவர்கள் பொல்காவலையில் ரயில் மாறவேண்டியிருப்பதால் பல சிரமங்களையும் அனுபவிப்பதுடன் தங்களின் உடைமைகளையும் இழக்க நேரிடுகிறதென்றும் இதனை நீக்கும்பொருட்டு பதுளையிலிருந்து மன்னார்வரை தனி ரயில் சேவை நடத்தப்படவேண்டுமென்றும் பல தொழிற்சங்கங்கள் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டிருந்தன.

இதற்கிணங்கவே அமைச்சர் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஏழு ஆண்டுகளில் இ. போ. ச. விபத்துகள் 39,010

### நஷ்டஈடு—ரூ. 1,50,000,00!

கொழும்பு, வியா

கடந்த 7 ஆண்டுகளில்இலங்கைப் போக்குவரத்துச்சபை, விபத்து நஷ்டஈடாக ஒன்றரைக்கோடி ரூபாவைவழங்கியுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இ. போ. சபையின் அதிகாரபூர்வவான கணக்குப்படி 1970ம் ஆண்டுமுதல் 1976ம் ஆண்டுவரையிலான ஏழுவருடகாலத்தில் விபத்து நஷ்டஈடாக மொத்தம் ஒரு கோடி 5 லட்சத்து 99 ஆயிரத்து 953 ரூபா 41 சதம் வழங்கியுள்ளது. இந்த ஏழு வருடகாலத்தில் மொத்தம் 39,010 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன!

ஆண்டு ரீதியாக வழங்கப்பட்ட நஷ்டஈடு விபரம் வருமாறு: 1970 - 15,12,236ரூபா 1971 - 15,46,622 ரூபா. 1972 - 18,09,224 ரூபா, 1973 - 17,92,134 ரூபா, 54 சதம், 1974 - 24,47,122 ரூபா 99 சதம், 1975 - 31,68,068 ரூபா 88 சதம் 1976 - 33,21,545 ரூபா. ஆண்டு ரீதியாக இடம்பெற்ற விபத்துகள் விபரம் வருமாறு: 1970 - 5.960, 1971 - 6,123, 1972 - 6,541, 1973 - 5,898, 1974 - 5,114, 1975 - 4,432, 1976 - 4942.

வழங்கப்பட்ட நஷ்டஈடு தொகையையும், நடைபெற்ற விபத்துக்களையும் அவதானிக்கும்போது விபத்துகளின் தொகை குறைந்து கொண்டே வந்திருக்கிறது. ஆனால் நஷ்டஈடாக வழங்கப்பட்ட தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது என்று இ. போ. சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

விபத்துக்கள்பற்றி இ. போ. ச. வட்டாரங்கள் தெரிவிக்கையில் விபத்துகள் சம்பந்தமாக பல்வேறு விசாரணைகள் நடைபெற்றபோதிலும் விபத்துகள் ஏன் அதிகரிக்கின்றன என்பதைக் கடந்தககாலத்தில் கண்டுபிடிக்கவில்லை என்று தெரிவித்தன.

ஏழாலைச் சம்பவம்:

## கைரேகை நிபுணர்கள் சுன்னாகம் வந்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த செவ்வாய்க்கிழமை ஏழாலையில் துணிகரக் கொள்ளை நடத்திய மர்மக் கோஷ்டி, மாஜி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் கயிற்றால் கட்டி மூன்று மணித்தியாலங்கள் 'துப்பாக்கி முனையில்' காவலில் வைத்ததாம்!

வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து கொள்ளையர்கள் சட்டத்தரணி திரு. பாலசிங்கம் தம்பதிகளைக் கயிற்றால் கட்டிவைத்துவிட்டு அவர்களது '504' ரக புதிய காரைக் கடத்திச் செல்கையில் வழியில் எதிர்ப்பட்ட மாஜி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கார் மீது சந்தேகம்கொண்டு காரை நிறுத்த முற்பட்டாராம்.

காரை நிறுத்திய கொள்ளையர்கள் "நீ இன்ஸ்பெக்டர் தானே? நீ தகவல் கொடுக்கக் கூடியவன்" என்று கூறி, கயிற்றால் கட்டினார்களாம்.

கொள்ளையரில் இருவர் துப்பாக்கி முனையில் இவரை பற்றைகள் மறைவில் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை காவல் செய்ததாகத் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க, கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட '504' ரக கார் தற்போது சுன்னாகம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கைவிரலடையாள நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (கா-உ)

## வாள்வெட்டு, பொல்லடி: நால்வர் ஆஸ்பத்திரியில்

நெல்லியடி, வியா.

வல்வெட்டியைச் சேர்ந்த நால்வர் வாள்களால் வெட்டப்பட்டும் பொல்லுகளால் தாக்கப்பட்டும் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ். நடராஜா, எம். துரைராஜா, எம். பன்னீர்ச் செல்வம், கே. தெய்வேந்திரம் என்போரே மேற்படி நால்வரும் என பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக, காயமடைந்தவர்களின் வாக்குமூலங்களை மேற்படி ஆஸ்பத்திரி பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வி. சிவசிதம்பரம் பதிவு செய்தார்.

இச்சம்பவம் தொடர்பாக நால்வர் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர். (உ)

## மாலைதீவு விமானநிலையத்தை ரஷ்யாவுக்கு கொடுக்க மறுப்பு

மாலைதீவு, அக். 27

மாலைதீவில் முன்னர்பிரிட்டிஷார் வசமிருந்த விமான நிலையத்தை சோவியத் யூனியனுக்குக் குத்தகைக்குகொடுக்க மாலைதீவு அரசு மறுப்புத்தெரிவித்துள்ளது.

இவ்விமான நிலையத்தை 10 லட்சம் டாலருக்கு குத்தகைக்குத் தருமாறு ரஷ்யா மாலைதீவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

மாலைதீவுப் பிரதமர் தமது மந்திரிசபையில் இதுபற்றி ஆராய்ந்த பின்னர் இந்தக் கோரிக்கையை நிராகரித்தார். (இ)

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

## தடையற்ற இறக்குமதிப் போட்டி ஆபத்து!

புதிய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து சஞ்சிகை, புத்தகங்களை இறக்குமதிசெய்ய முன்பு இருந்ததைவிட ஏராளமான பணத்தை-சரிபாதிக்கும் மேற்பட்ட தொகையை இறக்குமதியாளருக்கு ஒதுக்கியிருப்பதாகப்பத்திரிகைகளில்செய்திகளைப் படித்தபோது இந்த நாட்டில் பற்றும் பாசமும் கொண்டவர்கள் திடுக்கிடாமல் இருக்க முடியாது.

கடந்த காலங்களில் சில கட்டுதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால்தான் இந்த மண்ணிலும் சில முளைகள் அரும்பத் தொடங்கின. நமது எழுத்தாளர்களுக்கு முற்பணம் கொடுத்து அவரது ஆக்கங்களை நூலுருவில் கொண்டு வரக்கூடிய ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அத்துடன் நமது படைப்பாளிகளின் புத்தகங்களை வாங்கிப் படித்துச் சுவைக்கும் இலக்கியச் சுவைஞர்கள் பெருகக்கூட இந்தக் கட்டுப்பாடுகள் பெரும் பயனை அளித்தன.

தரமான நூல்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள் எங்கிருந்தாலும் வருவதை நாம் ஆட்சேபிக்கவில்லை, ஆனால் ஏராளமான பணத்தை முதலீடு செய்யும் வர்த்தகர்கள் சீக்கிரம் விலைப்படும் பரபரப்பு நூல்களையே இறக்குமதி செய்ய இயல்பாக விரும்புவர். எனவே என்ன கட்டுப்பாடும் அவர்களினது இந்த ஆசையைத் தடை செய்யமாட்டாது. கட்டுப்பாடு இருந்த காலத்திலேயே மறைமுகமாகப் பல பரபரப்பு நூல்கள் இங்கு மார்க்கட்டில் குவிக்கப்பட்டதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

வெங்காயம், மிளகாய் இறக்குமதி செய்வது எப்படி நமது விவசாயிகளைப் பாரதூரமாகப் பாதிக்குமோ அப்படியே கட்டுப்பாடற்ற புத்தக, சஞ்சிகை இறக்குமதிகளும்வளர்ந்துவரும் நமது கலை இலக்கிய ஆக்கங்களைப் பெருமளவு பாதிக்கும் என அச்சப்படுகின்றனர்,நமது படைப்பாளிகள்.

இந்தப் பயம் நியாயமானதேயாகும்.

கடந்த காலங்களில் பலஇன்னல்களுக்கு முகம் கொடுத்துப் போராடி வென்றெடுத்த பல நன்மைகளை ஒருசில வியாபாரிகளின் வர்த்தக லாபத்துக்காக இந்தநாட்டு எழுத்தாளர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

இப்படியான பிரச்னையில் நேரடியாகப் பாதிக்கப்படப் போகின்றவர்கள் இந்த நாட்டுப் படைப்பாளிகள் என்பதை மறந்துவிடக்கூடாது. சிங்கள எழுத்தாளர்களுக்கு இது பிரச்னையல்ல. தமிழ் எழுத்தாளரை இது பாரதூரமாகப் பாதிக்கும். கடதாசி விலை ஏற்றம், அடக்க விலை உயர்வு, மற்றும் சாதனங்களின் விலை அதிகம் ஆகிய காரணங்களால் இங்கு புத்தகம் போடும் நிறுவனங்களும் தனி எழுத்தாளர்களும் திக்குமுக்காடும் சூழ்நிலை இப்போதே அவர்களைப் பயமுறுத்துகின்றது. மீண்டும் தடையற்ற இறக்குமதிப் போட்டி ஏற்பட்டால் அரும்பிவரும் இளங்குருத்துக்களும் கருகித் தொலைய வேண்டியதுதான்.

சகலதிலும் தன்னிறைவும் தேசிய வளர்ச்சியும் ஏற்பட வேண்டுமெனக் கோஷிப்பவர்கள் தனித்துவமான நமது ஈழத்து இலக்கியம் வளர்ச்சியடையப் பசளையிட வேண்டும் என்பதில் மௌனமாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நூல்கள் இங்கு வெளிவரும் போது ஆக எழுத்தாளர்கள் மாத்திரம் நன்மைபெறுவதில்லை; அதனால் பல அச்சகத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கின்றது என்பதைநாம் மறந்துவிடக்கூடாது.

அரசாங்கமும் குறிப்பாகக் கலாசாரமந்திரி அவர்களும் இந்தப் பிரச்னை சம்பந்தமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எழுத்தாளர்களும் சும்மா ஒய்ந்திருக்கக் கூடாது.

டொமினிக்ஜீவா

யாழ்ப்பாணம்.

## சர்வதேச பல்கலைக்கழகம்

கொழும்பு, வியா

இங்கிலாந்தில் உள்ள கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் போன்று இலங்கையிலும் சகல வசதிகளும் பிரிவுகளும் கொண்ட சர்வதேசப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்க அரசு முடிவு செய்திருக்கின்றது.

இந்தப் பல்கலைக் கழகத்தில் வெளிநாட்டவர்களும் வந்து படிக்கக் கூடியதாய் இருக்கும். பட்டப்பின் மேற்கல்விக்காகக் வெளிநாடு செல்லும் நம்நாட்டவர்களும் இங்கேயே படிக்கும் வசதி ஏற்படும். இதனால் பெருமளவில் வெளிநாட்டுச் செலாவணி மிஞ்சும் என்று பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன கருதுகிறார்.

மருத்துவம் பொறிஇயல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மாணவர்கள் பட்டப்படிப்பை இங்கு தொடர முடியும்.

இப்பல்கலைக் கழகத்தை எங்கே அமைப்பது என்பது பற்றியும், அதற்கான வசதிகள் பற்றியும் ஆராய்ந்து முடிவெடுக்க குழுவொன்று நியமிக்கப்படவிருக்கின்றன. (ம)

"வடக்கிலுள்ளவர்கள் அடிக்கடி

# தெற்கேவந்து ஒற்றுமையை

## ஏற்படுத்த முன்வரவேண்டும்"

### — லயன்ஸ் மாவட்டகவர்னர்

பண்டத்தரிப்பு, வியாழன்

"வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகங்கள் எவ்வித இன மத வேறுபாடுகளுமின்றித் தங்களால் இயன்ற சேவையை ஆற்றியுள்ளன. நாட்டு மக்களிடையே தேசிய ஒற்றுமையையும், இன ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு லயன்ஸ் கழகங்கள் முன்னின்று உழைக்கும், வடக்கில் உள்ளவர்கள் அடிக்கடி தென்பகுதிக்குவந்து ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த முன்வரவேண்டும். மேற்கண்டவாறு சில்லாலையில் நடைபெற்ற வட்டுக்கோட்டை லயன்ஸ்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில்பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் லயன்ஸ் மாவட்டக் கவர்னர் திரு. ஒஸ்வின்சில்வா குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஒஸ்வின் சில்வா தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"உலகின் பல பாகங்களிலும் பேரியக்கமாக விளங்கிவரும் லயன்ஸ் கழகங்கள் சமூக சேவையை முக்கிய நோக்கமாகக்கொண்டு இயங்கிவருகின்றன. 149 நாடுகளிலுள்ள ஒரு கோடி 2 லட்சத்துக்கு அதிகமான மக்கள் இக்கழகங்களில் அங்கத்துவம் வகித்து வருகின்றனர். வாழ்க்கையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளை அளித்து அவர்களின் முக்கிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் பணியில் இக் கழகங்களில் தம்மை அர்ப்பணித்து வருகின்றன. நோயாளர்கள், அங்கவீனர்கள், விதவைகள் அநாதைகள் ஆகியோருக்குச் சேவையாற்றுவதே எமது முக்கிய இலட்சியமாக இருக்கவேண்டும்."

"உலக நாடுகள் பலவற்றில் இருப்பதைப் போலவே எமது நாட்டிலும் இளைஞர்களின் பிரச்னைகள் முக்கிய இடத்தை பெறுகின்றன. எமது சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் இளைஞர்கள். இளைஞர்களைச் சரியான முறையில் வழிநடத்துவதற்கேற்ற முறையில் எமது செயல்திட்டங்களை ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் பேசுகையில் இப்பகுதியிலுள்ள மக்களின் முக்கிய பிரச்னைகள் பற்றி எமது கழகம் ஆராய்ந்து எதிர்காலத்தில் பலமுக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், தெல்லிப்பழை லயன்ஸ்கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், லயன்ஸ் விஸ்தரிப்புத் தலைவர் திரு எச். ஹரிமன்சன், டாக்டர்யோகு பசுபதி உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட வட்டுக்கோட்டை லயன்ஸ்கழக நிர்வாக உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர் வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியர், செயலாளர் சட்டத்தரணி எஸ் குணரத்தினம், பொருளாளர் வைத்திய கலாநிதி அல்போன்ஸ் அத்தனுசியார் 10 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## சீதனக்கொடுமை ஒழிந்து வனிதையர் வாழ்வில் உவகை உதயமாகுமா?

ஆலயங்களிலும், இல்லங்களிலும் அருட்சக்தியை துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி என ஏற்றிப் போற்றி வணங்கும் தமிழ்ச் சமுதாயம் ஏன்தான் அன்னையர் குலத்தில் உதித்த இளம் பெண்களை சீதனம் இல்லை என்ற காரணத்தால் வாழ முடியாத நிலைக்கு உள்ளாக்குகிறதோ தெரியவில்லை.

கல்வியும், குணமும் நற்பண்பும் ஒருங்கே இருந்தும் கூட பணமில்லாத ஒரே காரணத்தால் பெண்பிள்ளைகளுக்கு வாழ்வில்லாத வெட்கக்கேடான நிலையை மாற்ற விஜயதசமியையடுத்த இந்நாட்களில் தமிழினம் தம் மனச்சாட்சியின் அடிப்படையில் உணர்ந்து உறுதி பூணுமா? இந்த அவமானம் நீங்குமா? வனிதையர் வாழ்வில் ஒளி பிறக்குமா?

நாக. பத்மநாதன்

புங்குடுதீவு-2

## பிரேரணை மீண்டும் பரிசிலிக்கப்படும்

மாவிட்டபுரம், வியா

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட சிறுபான்மைத் தமிழரது ஆலயங்களிலும் இசைச் சேவை செய்வது தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் மீண்டும் பரிசிலனை செய்யுமுகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த நாகசுர-தவில் கலைஞர்கள் தத்தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்ததையடுத்து சங்கச் செயலாளர் திரு எஸ். ஆர். ஞானசுந்தரம், சிறுபான்மைத் தமிழர்கள் பல வருடங்களாக தமது ஆலயங்களிலும் இசைக் கச்சேரிசெய்ய வேண்டுமென வற்புறுத்தி வருவதால் அவர்களது ஆலயங்களிலும் இசைக் கச்சேரி செய்ய வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிய சங்கப் பொருளாளர் திரு என். கே. பத்மநாதன் வழிமொழிந்தார்.

இக்கூட்டத்தில் சகல உறுப்பினர்களும் கலந்து கொள்ளாமையால் இப்பிரேரணையை மீண்டும் ஒரு கூட்டத்தை நடத்தி சகலரையும் அழைத்து பரிசிலனை செய்தபின் இறுதிமுடிவெடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. (அ)

காரைநகர் - முல்லைத்தீவு பஸ்சேவை

## குமுழமுனைவரை நீடிப்பு

முல்லைத்தீவு,வியாழன்

காரைநகர் முல்லைத் தீவு பஸ்சேவை குமுழமுனை வரை நிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிரயாணிகள் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அனுராதபுரம் கட்டுப்பாட்டாளர் திரு.டொன்வீரக்கோன் கடந்த 24-ம் திகதியில் இருந்து இச்சேவை நீடிப்புக்கான உத்தரவை வழங்கியிருந்தார்.

சங்கத்தலைவர் திரு.கே. இளையதம்பி தலைமையில் பிரயாணிகள் சங்கத்தின் பல பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன.

இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் திரு. வீரக்கோனும் கலந்து கொண்டார். குறிப்பிட்ட பிரேரணையில் உடனடியாக நிறைவேற்றக் கூடிய பிரேரணைகள் தவிர்ந்த ஏனைய பிரேரணைகளைத்தமது மேலதிகாரிகளுடன் கலந்தாலோசித்துநடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

சங்கச்செயலாளர் திரு.ரி. எஸ். தியாகலிங்கமும் தம் பிரேரணைகள் நிறைதேற்றப் படவேண்டியதன் அவசியம் குறித்து வற்புறுத்தினர்.(உ)

## காங்கேசனில் கொடித்தின நிதி சேகரிப்பு

மாவிட்டபுரம்,வியாழன்

காங்கேசன்துறைத் தொகுதியில் காங்கேசன்துறை மல்லாகம் தெல்லிப்பழை மயிலிட்டி ஆகிய உள்ளூராட்சி மன்ற பகுதிக்குள் மாதகல் இளவாலை ஆகிய கிராமங்களிலுமாகச்சேர்ந்து 9 ஆயிரம் ரூபா நிதிஅகதிகள் கொடித்தினம் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதைவிடமேலும் 3 ஆயிரம் ரூபா சில பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களிடையே சேகரிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைத் தொகுதியிய் மயிலிட்டிறோமன் கத்தோலிக்க பாடசாலை திரு . ச. சிவனடியாரது முயற்சியாய் 202ரூபா 88 சதம் சேகரித்து வழங்கப்பட்டது:

கம்யூனிஸ்ட் பிரமுகரும் தமிழர் புனர்வாழ்வுச்சபை பிரதிநிதியுமான திரு. வி. பொன்னம்பலம் திரு.சிவமகாராசா ஆகியோர் காங்கேசன்துறைத்தொகுதியில் கொடித்தினதிற்குப் பொறுப்பாயிருந்தனர். (உ).

## விவசாயிகள் கோரிக்கை

பண்டத்தரிப்பு, வியா.

அண்மையில் ஏற்பட்டபெரு வெள்ளத்தினல் இப் பகுதி விவசயிகளின் மிளகாய் நாற்றுமேடை முற்றுகஅழிந்து போய்விட்டது.

சிறந்த இனவிதை மிளகாய் என்றுசொல்லப்படும் 'எம் ஐ1' என்ற விதை இனத்தை கமத்தொழில் சேவைநிலையங்கள் மூலம் தங்களுக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பகுதியிலுள்ள இளம் விவசாயிகள் கழகங்களும், விவசாயிகளும் யாழ். மாவட்ட கமத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரியைக் கேட்டுள்ளனர்.

## சித்தாந்தப் பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்படும் சித்தாந்தப் பரீட்சைகள் டிசம்பர் 29-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுதிகதிஅடுத்தமாதம் 10-ம் திகதியாகும். —— (அ)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் இன்றைய கார்த்திகை விழாவில் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா "அருணகிரிநாதர்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார். விழாவிற்கு பொன். வித்தியானந்தன் தலைமைதாங்குவார். (கெ-உ)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,வெள்ளி

வடஇலங்கை தமிழ்பாலர் ஆசிரியைகள் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் செல்வி அ. இராஜேஸ்வரி உபதலைவர் திருமதி சற்குணதேவி இராசா செயலாளர் செல்வி அமிர்தாம்பிகை கந்தசாமி உபசெயலாளர் திருமதி சோதிரட்ணம் ஆனந்த நடராசா பொருளாளர் செல்வி நகுலேஸ்வரி துரையப்பா உபபொருளாளர் செல்வி மா. சிவமலர் செயற்குழுவில் ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர். (கெ-உ)

நாகம்மஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர் - சாவித்திரி
தாய்க்கு ஒரு பிள்ளை

RIO (Jaffna)
Daily 4 Shows
GOD FORGIVES I DON'T

## அரிசி திருட்டு 16 பேர் கைது

திருகோணமலே, வியா.

சீனன்குடா உணவுக் களஞ்சியத்தில் இருந்து 57 மூடை இறக்குமதி அரிசி திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சீனன்குடா பொலிசார் சந்தேகத்தின் பேரில் 16 பேரைக் கைது செய்துள்ளனர்.

அரிசி மூடைல்லின் ஒருபகுதி பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

புலன் விசாரணை தொடர்கிறது. [உ]

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
YOU ONLY LIVE ONCE
(Scope Color Action Packed Thriller)

சாந்தி யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
'FIVE CRAZY BOYS'
(Color)
போன்; 7642

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்)
காலை 9-30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும் காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
போன்; 7693
எம். ஜி. ஆர். லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

## "சகோதரத்துவ உணர்வு வேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"லயன்ஸ் கழகம் சேவையின் அடிப்படையில் இயங்குகிற தொன்றாகும். ஆனால் வசதியற்ற மக்களுக்கு பல்வேறு வசதிகளை, உதவிகளை அளிப்பதுமட்டும் சேவையாகிவிட முடியாது. மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து, பேதங்கள் பாராட்டாது தனிமனித சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிக்காது சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒரு நிலையைத் தோற்றுவிக்கக்கூடியவகையில் நமது சேவைகள் அமையவேண்டும்" என்று யாழ்லயன்ஸ்கழக 4 வது ஆண்டு விழாவில் கலந்துரையாற்றிய தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் கூறினார்.

லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இவ்விழாவில் வடமாகாண லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், ரோட்டறிக் கழகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (மாவி.அ)

## மட்டுவில் கோஷ்டி வென்றது

மட்டுவில், வியாழன்

தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தின் தென்மராட்சி ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் தென்மராட்சி விளையாட்டுக்கழகமும் ஆரம்ப ஆட்டத்தில் மோதின.

1-0 கோலால் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

சாவகச்சேரி மகிழங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி இடம் பெற்றது.

கடும் மழை காரணமாக மேற்படி சுற்றுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. (உ)

## தாயகம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயகம் திரும்புவோரின் பிரயாண வசதிகளுக்காக பதுளையிலிருந்து மன்னருக்கு மேலதிக ரயில் பெட்டிகள் இணைக்கப்படும். இந்த மேலதிக ரயில் பெட்டிகள், பதுளையிலிருந்து கொழும்பு செல்லும் தபால் ரயிலுடன் இணைக்கப்படும். இப்பெட்டிகள் பொல்காவலையில் தனியாகக் கழற்றப்பட்டு பின்னர் கொழும்பிலிருந்து தலைமன்னார் செல்லும் ரயிலுடன் இணைக்கப்படும். இப்புதிய ஏற்பாடுகளின்படி பொல்காவலையில் இந்தியப் பிரயாணிகள் 'இறங்கி ஏறுவது' தவிர்க்கப்படும்.

பூலோஸி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவராம் - கீதாஞ்சலி
காத்திருப்பேன் உனக்காக

மூன்றுவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)



## தொழிற் பிணக்குகள்: புதிய சட்டமூலம் தயாரிக்க சினிமா ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

'தொழில் ஆணையாளர் விசாரணைகள், தொழிற் கோட்டு விசாரணைகள், கைத்தொழிற் கோட்டு விசாரணைகள் ஆகியன தொழில் பிணக்கேற்பட்டு ஒரு வருடம் முடிவடைவதற்குள் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படவேண்டும். இதற்கான சட்ட மூலம் ஒன்றை ஆக்குக.'

இவ்வாறு தொழில் மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றினை சினிமா ஊழியர் சங்க வடபிரதேசக் கிளை தனது பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் கூட்டம் தலைவர் திரு. மு. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடபிரதேசத்தின் பல பாகங்களிலிருந்தும் உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர். தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் திரு. எஸ். தியாகராசா விசேஷ அழைப்பின் பேரில் சமுகமளித்திருந்தார்.

மேற்படி கோரிக்கையை வலியுறுத்துமாறு மற்றும் தொழிற் சங்க சம்மேளனங்களை கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானப் பிரதிகள் பிரதமர், நீதிமந்திரி, உதவி தொழில் மந்திரி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

எம். எம். இ. இக்பாலும் உரையாற்றினர்.

சங்கச் செயலாளர் திரு. செ. ஞானசுந்தரம் நன்றியுரை வழங்கினர். (கூ)

## வெளிநாட்டுக் கரன்ஸியும் கொள்ளையில்சிக்கியது

கொழும்பு, வியா.

கொள்ளுப்பிட்டியில் உள்ள வீடு ஒன்றை நேற்று அதிகாலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அவ்வீட்டிலிருந்து 10 ஆயிரம் ரூபா இலங்கைப் பணத்தையும் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்சி நோட்டுக்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

கொள்ளுப்பிட்டி சார்ள்ஸ் பிளேஸில் உள்ள இல்லத்தில் நேற்று அதிகாலை 1-30 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் இக்கொள்ளை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்கணிவழியாக உட்புகுந்த கொள்ளையர்கள் பிரதான கதவு வழியாக உட்சென்று இக்கொள்ளையை நடத்தினர்கள் என்று பொலிசார் தெரிவித்தனர். (இ)

## நூல்வெளியீடும் நலனுய்வும்

கொழும்பு, வியா.

காவலூர் ஜெகநாதன் எழுதிய 'கலட்டுத்தரை' என்னும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழாவிழா இம்மாதம் 30-ம் திகதி கொழும்பு விவேகானந்தசபை கீழ்மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. ரி. இலக்ஷ்மணன் தலைமையில் நடைபெறும் இவ்விழா வன்செயல்களினால் உயிரிழந்தோருக்கு மௌனஞ்சலியுடன் ஆரம்பமாகும். அருட்திரு சா. ம. செல்வரத்தினம் திரு. க. குகதாசன், சில்லையூர் செல்வராசன், திரு. கு குருசாமி திருமதி அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோர் நலனுய்வு செய்வர்.

## சனசமூகநிலைய உதவி நன்கொடை

பண்டத்தரிப்பு, வியா

பண்டத்தரிப்பு பட்டண சபை பிரதேசத்தில் இயங்கி வரும் சன சமூக நிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான உதவி நன்கொடைப் பணம் விரைவில் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை பட்டணசபை விசேட ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

அடுத்த மாதம் 4-ம் திகதி தமது பகுதியிலுள்ள சன சமூக நிலையங்களின் நிர்வாக அறிக்கைகளையும் மற்றும் பத்திரங்களையும் தம்மிடம் நேரில் சமர்பிக்க வேண்டும் என்று சகல சனசமூக நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் விசேட ஆணையாளர் கேட்டுள்ளார்.

## சென்பற்றிக்ஸ் கோஷ்டிகள் சாதனை

அரியாலை, வியா.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் சென்ற் பற்றிக்ஸ் கல்லூ உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்குமிடையில் உதைபந்தாட்டப் போட்டி யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல்போட்டன. இடைவேளைக்கு முன்னர் ஒருகோலை அடித்து பரியோவான் கல்லூரிக்கோஷ்டி மிகவும் முன்னணியில் விளங்கியது. தொடர்ந்து மிகவும் உக்கிரமமாக விளையாடிய சென்பற்றிக்ஸ் கோஷ்டி விளையாட்டு முடிவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் ஒரு கோலை அடித்துச் சமமாக்கிக் கொண்டது. இரு கோஷ்டிகளும் மிகவும் உற்சாகமாக விளையாடிய பொழுதிலும் தமக்குக்கிடைத்த தருணங்களில் கோல்போடத் தவறிவிட்டன.

2-ம் பிரிவுப் போட்டியில் 5-1 கோல்களாலும், 3-ம் பிரிவுப் போட்டியில் 3-1 கோல்களாலும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டிகள் பரியோவான் கல்லூரிக்கோஷ்டிகளைத் தோற்கடித்தன. (அ)

## "மீண்டும் பதவிவழங்குக"

நீர்வேலி, வியா.

வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தற்காலிக பணியாளர்களாகக் கடமையாற்றி வந்த முப்பத்திநான்கு பணியாளர்கள் அக்டோபர் மாதம் முதல் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பதவி நீக்கம் செய்யப்பட்ட இப்பணியாளர்களுக்கு மீண்டும் பதவி வழங்க வேண்டுமெனவும், இவர்களின் சேவை சங்கத்திற்கு அவசியம் எனவும் இதுசம்பந்தமாக உரிய அதிகாரிகளுடனும் இயக்குநர் சபையினருடனும் பேச்சுவார்த்தைகள் செய்வதற்கான விசேடகுழு ஒன்றும் மேற்படி சங்கசபாமண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் சங்கப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பெற்றது.

ஊழியர்கள் சங்கத்தலைவர் திரு ச. செல்வரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. [உ]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### மணிவாக்கு

எவன் ஒருவன் பிறருக்கு தீங்கிழைக்கின்றானோ அவன் தனக்குத் தானே தீங்கிழைக்கின்றவனாகின்றான்.

—காந்திமகான்.


# ஈழநாடு
The Eelanaadu


## பொலிஸாரும் பொது மக்களும்

"எந்த வங்கியில் எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது?"

"எந்த இடத்தில் எவருடைய மோட்டார் கார் கடத்தப்பட்டது?"

"எந்தவீட்டுக்குள் புகுந்து எவ்வளவு கொள்ளை?"

"எந்த இடத்தில் வழிப்பறி?"

இப்படியான செய்திகள் தான் கடந்த சில காலமாக நமது நாட்டுப் பத்திரிகைகளில் தினமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மேல்நாடுகளில் இப்படியான துணிகரக் கொள்ளைகள் நடைபெறுவதாகப் பத்திரிகைகளில் படித்து அவற்றை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களையும் பார்த்து ஆச்சரியமடைந்த நமது நாட்டுமக்கள் அவை போன்ற சம்பவங்கள் நமது நாட்டிலேயே நடைபெறுவது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

வீதியில் நடப்பதோ வீட்டிலிருப்பதோ கார்களில், பஸ்களில், ரயில்களில் பிரயாணம் செய்வதோ பாதுகாப்பற்றதாகிவிட்டது.

எந்தச் சமயம் யார்; எங்கே எப்படி என்னசெய்வார்களோ என்ற நிச்சயமற்ற நிலை.

நாம் பிறந்து வளர்ந்த சொந்தப் பூமியிலேயே அச்சமின்றிச் சுதந்திரமாக நடமாட முடியாத கவலைக்குரிய காலம்.

கொள்ளையும், கார் கடத்தலும், வழிப்பறியும், வன்செயலும் சில வருடங்களுக்குமுன் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு செய்தியாகவே இருந்தது.

இப்போது வடக்கு மாகாணத்திலுள்ள மக்களே எந்தச் சமயத்தில் எது நடக்குமோவென்ற அச்சத்துடன் வாழ்கின்றனர்.

வடக்கில் வன்செயல்களும் கொள்ளைகளும் ஆரம்பித்த சமயத்திலிருந்து சமீபகாலம்வரை இந்தச் செயல்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் தொடர்பிருப்பதாகவே பொலிசார் முதல் பொறுப்புள்ள அமைச்சர்கள்வரை கருதிவந்தனர்.

இதற்கு வாய்ப்பாக கொள்ளையடிப்பவர்களும் இயக்கத்துக்காகக் கொள்ளையடிப்பதாகக் கூறிச்சென்று தப்பித்துக்கொண்டனர்.

கூட்டணிக்கும் வன்செயல்களுக்கும் தொடர்பிருப்பதாகத் தாம் கருதவில்லையென்றும் யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த காலத்தில் பொலிசார் பொதுமக்களுடன் நடந்துகொண்ட முறைகள் யாழ்ப்பாணத்தில் நடந்த பல சம்பவங்களினூடு பொலிசார்மீது, இப்பகுதி மக்களுக்கு முற்றாகவே நம்பிக்கையற்றுப் போய்விட்டது.

பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் நாட்டின் எப்பகுதியிலும் குற்றச் செயல்களை ஒழித்து விடமுடியாது.

இதை நன்குணர்ந்து கொண்ட யாழ் மாவட்டத்தின் புதிய பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ்ரன் முத்துகல, பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறார்.

அவருடைய இந்த முயற்சிக்கு யாழ். மாவட்டத்திலுள்ள இதர பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்புக் கொடுத்து கடந்த காலத்தில் இழந்துபோன பொதுமக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவதில் வெற்றி பெறுவார்களென்று நம்புகிறோம்.

இதேசமயம் நாட்டில் கொள்ளைகளும் வழிப்பறிகளும் எந்த நோக்கத்துக்காக நடைபெற்றாலும் அவற்றை வளரவிடுவது சமுதாயத்தின் வளர்ச்சிக்கோ முன்னேற்றத்திற்கோ எந்த விதத்திலும் உதவமாட்டா தென்பதைப் பொதுமக்களும் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மன்னாரில்

# புனர்வாழ்வு பெற்ற அகதிக் குடும்பங்கள்

மன்னார், வியாழன்

கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடக்கே வந்து தஞ்சமடைந்த குடும்பங்கள் சில மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இந்தக் குடும்பங்களில் பல மன்னாரில் அரசாங்கக் காணிகளில் குடியேற்றப்பட்டுவிட்டன

மிகுதிக்குடும்பங்களும் இம்மாதம் 30-ம் தேதிக்கு முன் குடியமர்த்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் அரசாங்க அதிபரும் மாவட்டக்காணி அதிகாரியும் எடுத்த துரித நடவடிக்கையே இதற்குக் காரணமென்று பேசிக்கொள்ளப்படுகின்றது.

### கல்விச்சேவை
## நிர்வாக மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த மகாநாடு அடுத்த மாதம் நான்காந் தேதி கொழும்பில் நடைபெறுமென்றும் அதில் கல்வி அமைச்சர் திரு. நிஸ்ஸங்கா விஜயரத்தின பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வாரென்றும் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உபதலைவர் திரு. பி. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

## ஐந்து ஆண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இரண்டாவது தடவையாக 1977ல் நான் கலந்துகொள்ளும் முக்கியத்துவம் மிக்க விவசாய நிகழ்ச்சி இதுவாகும்

### புராதன குளங்கள்

"இந்நாட்டில் சிங்கள மன்னர்கள் ஏர்முனைக்கு அளித்து வந்த முக்கியத்துவம் அளப்பரியது. நம்நாட்டின் புராதன குளங்களைப் பார்த்து வெளிநாட்டவர்களே ஆச்சரியப்பட்டிருக்கின்றார்கள். நம் மூதன்னோர் வெளிநாட்டு உதவியின்றியே இப்புராதன குளங்களை அமைத்து விவசாயத்துறையில் உயர்ந்து நின்றனர் என்பதை நம் கருத்திற்கொள்ளவேண்டும்" என்று கூறினர்.

அமைச்சர்களின் பாரியார்களுக்கும் பிரதமருக்கும் ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் உழவர்கள் பாற்சோறு வழங்கினர். (உ)

## தென்னிலங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கைப்பகுதிகளிலிருந்து இங்குவர ஆவல்கொண்டுள்ளவர்களுக்கும் வாழ்வளிக்கவேண்டியுள்ளது. தாம் தென்பகுதிகளில் தொடர்ந்து வாழமுடியாத சூழ்நிலை நிலவுவதால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் குடியேறி விவசாயம் செய்ய விரும்புவதாகவும், அதற்கு ஆவன செய்யுமாறும் கோரி நாளாந்தம் கடிதங்கள் வருகின்றன. ஆகவே எம்மீது மேலும் பெரும் பொறுப்பு சுமத்தப்படுகின்றபோதும் எமது சகோதரர்களை வாழவைப்பது நமது கடமை என உணர்ந்து செயல்படவேண்டும்.

"அரசாங்கம் அகதிகளை வாழவைக்கும் என நாம் நம்ப முடியாது. அடுத்த மாதம் 15ம் திகதியுடன் அகதிகள் முகாம்களை மூடி, அகதிகளை அவரவர் இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக வதந்திகள் கூறுகின்றன. இது குறித்து அரசுடன் பேசி நடவடிக்கை எடுப்பேன். அத்துடன் அகதிகள் நலனுக்காக உலக நாடுகள் வழங்கிய நிதி உதவிகள் கூட வேறு விதங்களில் செலவழிக்கப்படுவதாக அறிகிறோம். ஆகவே இதுகுறித்தும் நான் உடன் நடவடிக்கை எடுப்பேன். தமிழர் புனர்வாழ்வுச் சபைகள் எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் இயங்கவேண்டியுள்ளது. ஏதோ நிதிசேகரித்தவுடன் அவர்களுக்கு நாம் வாழ்வளித்துவிட்டோம் என எண்ணமுடியாத நிலையில் உள்ளது. இதை நமது மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும்."

தமிழர் புனர்வாழ்வுச் சபையைச் சேர்ந்த திரு. எஸ். நடராசா பேசுகையில், "அகதிகள் புனர்வாழ்வுக்கென சேகரிக்கப்பட்ட நிதியில் ஒரு சதமேனும் வீணைச் செலவழிக்கப்படமாட்டாது நிர்வாகச் செலவுகளைக்கூட புனர்வாழ்வுச் சபையைச் சேர்ந்தவர்களே பொறுப்பேற்கிறார்கள். இதுவரை 70 குடும்பங்களைக் குடியேற்றி புனர்வாழ்வளித்துள்ளோம். விரைவில் 150 குடும்பங்களுக்கு குடியேற்றத் திட்டங்கள் அமைத்து புனர்வாழ்வளிக்க உள்ளோம்" என்றார்.

திரு. வி. பொன்னம்பலம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (அ)

## மரண அறிவித்தல்
### வ. நா. தம்பு

காங்கேசன்துறை கமலா வாச் வேக்ஸ் உரிமையாளரும், இளைப்பாறிய ரயில்வே ஊழியருமான வ. நா. தம்பு காலமானார். இவர் புஷ்பமணியின் அன்புக்கணவரும், சக்திதாஸன், தேவதாஸன், பத்மாவதி, காந்திமதி, தனலாவதி, சத்தியவதி, கமலாவதி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (28-10-77) மாலை காங்கேசன்துறை மயானத்தில் நடைபெறும். 7585

## இராணுவ தளபதி யாழ், விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புதிய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டெனிஸ் பெரேரா, யாழ்ப்பாணப்பகுதி இராணுவ முகாம்களுக்கு நவம்பர் 2-ம் தேதி விஜயம் செய்ய இருக்கிறார்.

## எரிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெ. யோகேஸ்வரன், அரசாங்க அதிபர் திரு டபிள்யு எல். ஏ. விஜயபாலா, யாழ் விசேட ஆணையாளர் திரு கே. சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

எரிந்த பழையமார்க்கட்டை கட்டும் செலவுகளை அரசு பொறுக்கவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### குடிநீர்ப்பிரச்னை

யாழ்ப்பாண நகரத்தின் குடிநீர்ப்பிரச்னை பற்றி ஆராயப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு தற்பொழுது கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து 2 கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கப்படுவதாக யாழ். விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இரண்டு கிணறுகள் பாவிக்கப்படாமலிருப்பதாகவும் அதனைப் பாவித்தால் தண்ணீர்ப் பிரச்னையை ஓரளவு தீர்த்துக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். இரு கிணறுகளையும் பாவித்தால் 1 லட்சத்து 50 ஆயிரம் கலன் தண்ணீர் கூடக் கிடைக்கும் என்றும் திரு. சிவஞானம் சுட்டிக்காட்டினார்.

அவ்விரு கிணறுகளை பாவிப்பதற்குப் பழுதடைந்த பம்பை உடனே மாற்றியமைக்கவும் கோண்டாவில், திருநெல்வேலி கிணறுகளுக்கு இணைப்பு ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் பிரதி அமைச்சர் திரு. பீ. சி. இம்புலான உத்தரவிட்டார். யாழ்ப்பாணத்திற்கு இரணைதீவு தண்ணீரை விநியோகிப்பது பற்றிய நீண்டகாலத் திட்டமொன்று பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

(இந்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் நாளை வரும்)

## பாகுபாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரர் ஜி. ஜி. பொன்னம்பலம் இருந்த காலத்தில் இப்பகுதியின் அபிவிருத்திக்காக காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலையை உருவாக்கினார். நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். எமது அரசாங்கமே முதன்முதலில் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்தது. காணியில்லாத கிராம மக்களுக்கு காணி வழங்கப்பட்டது. முதன்முதலாக இலவசக்கல்வியை அளித்தது எமது ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம்தான். சாதாரண ஏழை, விவசாய, தொழிலாள மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டது.

இலவசகல்வியினால், சாதாரண ஏழைமக்களின் பிள்ளைகளும், உயர்கல்விபயிலவாய்ப்பு கிடைத்ததுஅவர்கள்டாக்டர்களாக, பொறியியலாளர்களாக,சட்டமேதைகளாக வந்துள்ளனர். சாதாரண மக்கள், வங்கியிலிருந்து ஒருசதமேனும், கடனைப்பெறமுடியாமல் இருந்த நிலையை மாற்றியமைத்தோம் இந்த மாற்றத்தினால், ஏழை மக்களும், வங்கிகளில் கடன் பெற்று வாழ்வில் முன்னேறினார்கள். கல்வி பொருளாதார துறைகளில், ஏழைகள் அபிவிருத்தியடைந்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், பிரதிஅமைச்சர் எங்கள் குறைகளை கேட்டறிய நேரில் வந்துள்ளார். நாங்கள் பைல்களையும் கொண்டு அவரிடம் கொழும்பிற்கு செல்வதற்கு பதிலாக அவரே நம்மிடம் வந்து, எங்கள் பிரச்னைகளை நேரில் கேட்டறிந்துசெல்ல இங்குவந்துள்ளார் என்றார். (உ)

## நாடும் நடப்பும்

சுமார் ஒருவார காலத்தின் பின் யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று முன்தின மாலையும் நேற்று பகலும் மழைகொஞ்சம் ஓய்ந்து சூரிய வெளிச்சத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

எவ்வளவு வெய்யிலையும் தாங்கிக்கொள்ளலாம் ஒரு நாள் மழையைச் சமாளிப்பது பெருந்தொல்லை என்று அலுத்துக்கொண்டவர்களுக்கு நேற்று சற்று ஆறுதல்.

பயிர்கள் வெள்ளத்தில் அழிந்துவிடுமோவென்று அஞ்சியவர்கள் சில தினங்களுக்காவது மழை விட்டுக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர். கஷ்டப்படும் விவசாயிகளின் பிரார்த்தனை வீண் போகாதென்றே நினைக்கிறேன்.

° ° °

"கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் மிகப் பிரமாண்டமான பேரணி ஒன்றை நடத்தினார். அவர் அப்பேரணியை அப்படியே அழைத்துச் சென்று கடலில் இறங்கி நீந்திச்சென்று இலங்கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு மனுக் கொடுக்கப்போகிறார் என்றல்லவா நாம் எண்ணி இருந்தோம்."

இவ்வாறு சேலத்தில் தமிழ் நாடுஅமைச்சர்திரு எட்மண்ட் இலங்கைத் தமிழர் ஆதரவுப் பேரணி பற்றி கிண்டலாகப் பேசினாராம்.

இதற்கு 'முரசொலி' ஆசிரியர் கரிகாலன் அளித்துள்ள பதிலில் "அமைச்சர் எட்மண்டுக்கு கடந்தகால அரசியல் வரலாறு தெரியவில்லை 1961ல் இதேபோன்று ஒரு பெரிய பேரணியை இலங்கைத் தமிழருக்காக பேரறிஞர் அண்ணா நடாத்தினார். அவர் எவ்விதம் இலங்கைத் தூதரகத்திடம் மகஜர் கையளித்தாரோ அவ்வாறே நாமும் இலங்கைத் தூதுவராலயத்திடம் எமது முறையீட்டை மகஜராக சமர்ப்பித்தோம்" என்று கூறியுள்ளார்.

இப்படியும் வேடிக்கையான நிகழ்ச்சிகள் நடைபெறத்தான்வேண்டும்.

° ° °

யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலையத்தின் ஊடாக ஒலிபரப்பப்படும் தமிழ்ச்சேவையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணியிலிருந்து தமிழ்ச்சேவை ஒன்றின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தன

காலை 7-28 மணிக்குஅடுத்ததாக "உலகச் செய்திகள்" நடைபெறும் என்றும் அதைத் தொடர்ந்து மதுரை மணி ஐயரின் பாடல்கள் ஒலிபரப்பப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

அடுத்த நிமிடம் எங்கிருந்தோ சினிமாப்பாடல்ஒன்று அதே மீட்டரில் ஒலிபரப்பாகியது.

அப்பாடல் முடிவுற்று உலகச் செய்தி பற்றி அறிவிக்கப்பட்டபோதே அந்தப்பாடல் தமிழ்ச்சேவை இரண்டில் ஒலிபரப்பாகின்றது என்பதை அறியமுடிந்தது.

ஆனால் ஏற்கனவே அறிவித்திருந்தபடி உலகச் செய்தியின் பின் மதுரை மணி ஐயரின் பாடலையே காணோம். தொடர்ந்து 'பொங்கும் பூம் புனல்' நிகழ்ச்சியில் சினிமாப் பாடலே ஒலிபரப்பாகியது.

பாவம் மதுரை மணிஐயரும் அவரது ரசிகர்களும்!

— ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.